உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
திராவிட மாபாடிய கர்த்தராகிய

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்

பிரபந்தங்கள்.

கச்சி ஆனந்த ருத்திரேசர் பதிகம்
திருத்தொண்டர் திருநாமக் கோவை
திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு
சுலோக பஞ்சக மொழி பெயர்ப்பு
பஞ்சாக்கர தேசிகர் மாலை

விக்குருதி — சித்திரை — ஆபிலியம்
1950.

ஸ்ரீ வெங்கடேஸ்வர் அச்சுக்கூடம், கும்பகோணம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து

திராவிட மாபாடிய கர்த்தராகிய

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்

பிரபந்தங்கள்.

இவை

அவ்வாதீனத்து 20-வது குருமஹாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

அவ்வாதீன வித்துவான்

த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையால்

பரிசோதித்து

நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

பதிப்பிக்கப்பெற்றன.

விக்குருதி — சித்திரை — ஆயிலியம்

1950.



திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
20-வது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெ
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு
நீடூழி தழைக மாதோ.

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துக் தல தெய்வமாகப் பாராட்டப் பெற்றுவரும் பெருஞ்சிறப்பு திராவிட மாபாடிய கர்த்தாராகிய ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகளுக்குரியதே. இம் முனிவர்பிரான் தெய்வச் செந்தமிழ் மொழிக்கும் சித்தாந்தச் செந்நெறிக்கும் செய்த திருத்தொண்டுகள் தமிழ் மக்கள் அனைவராலும் கொண்டாடப்படத்தக்கதே ஆம். இந்தச் சிவஞான சூரியன் ஒளி பரவாத நாடில்லை. தமிழ்ப் புலவர் பெருமக்களில் இம் மகானை அறியாதார் இல்லை.

சுத்தாத்துவித சித்தாந்த சைவர்கட்குப் பரமாசாரியராய் பர தெய்வமாய் உள்ளத்திலே ஒளிர்வது இம் மூர்த்தியே. உண்மையாகத் தமிழ் மக்களும் சைவப் பெரு மக்களும் சுவாமி கள் திரு நட்சத்திரத்தை ஊர்தோறும் மிகச் சிறப்பாகக் கொண் டாடுதல் இன்றியமையாத சிவ புண்ணியச்செயல். செய்ந் நன்றி மறவாமற் பாதுகாப்பதுமாம்.

இவர்கள் பாண்டி நாட்டில் தோன்றியவர்கள். சோழ நாட்டிலே சைவராசதானியாக விளங்கும் திருவாவடுதுறை யிலே இருந்து சைவத் தனியரசும் தமிழ்ப் பேரரசும் செலுத்திய வர்கள். சென்னையிலும், காஞ்சியிலும் சென்று தங்கிச் சிவ ஞானப்பேரொளி பெருக்கியவர்கள். துறவுத் தனிமுடி சூட்டப் பெற்றவர்கள். இவர்கள் அருளிய நூல்களில் தமிழ் நலம் கனிந்தூறும், சிவமணங் கமழும், சிவஞானத்தே னொழு கும், பத்திச் சுவை நனி முதிரும், இலக்கண இலக்கியங்களின் நலம் பல கொழிக்கும். இன்னோரன்ன சுவைகள் மலிந்த பிரபந்தங்களையெல்லாம் தொகுத்து கி-பி. 1889 விரோதி ஆண்டு (61 ஆண்டுகள் முன்) மதுராபுரி வாசியும் இவ்வாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணவர்களுள் ஒருவரும் ஆகிய இராமசாமிப் பிள்ளை என்று வழங்கும் ஞானசம்பந்தப் பிள்ளையவர்கள் அச்சியற்றி வெளி யிட்டுள்ளார்கள். திருவேகம்பரந்தாதி, திருமுல்லை வாயிலந்தாதி இவைகட்கு உரையு மெழுதியுபகரித்துள்ளார்கள். இத் தொகுப் புக் கிடைப்பது இப்போது மிக அரிதாயிற்று. பின்பு, திருநெல் வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தனித்தனியாகவும், தொகுப்பாகவும் வெளியிட்டுத் தமிழ்

டிக்களுக்கு இப்பிரபந்தங்கள் கிடைக்கச் செய்தார்கள். இவற்றுள் சில பல நூல்கட்கு அரும்பொருள் விளக்கமும், சில நூல்கட்குப் பதவுரையுமாகக் கழகத்தார் வெளியிட்டுதவிய பேருநன்றி சைவ நன்மக்களால் போற்றுதற்கரியதே.

எனினும், திராவிட மாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள், கவிராக்ஷஸ ஸ்ரீ கச்சியப்ப முனிவர், மதுரகவி தொட்டிக்கலை — ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர், இலக்கணக்கொத்து — ஸ்ரீ சாமிநாத தேசிகமூர்த்திகள் முதலிய இவ்வாதீனத்துப் பெரியோர்கள் அருளிச்செய்த பிரபந்தங்களையும் குறிப்புரை முதலியவற்றுடன் வெளியிட வேண்டுமென இப்போது இவ்வாதீனத்தில் **20-வது குரு மகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து குருக்ஷேத்திர பரிபாலனம், சிவ க்ஷேத்திர பரிபாலனம், சித்தாந்த சைவ சமய பரிபாலனம், செந்தமிழ்ப் பரிபாலனம் முதலியவற்றைச் செய்துகொண்டு மிக்க புகழுடன்விளங்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிகபரமாசார்ய சுவாமிகள் கட்டளையிட்டருளினார்கள்.**

அக்கட்டளையை எளியேன் சிரமேற்கொண்டு இவ்வாதீனத்துப் புத்தகசாலையாகிய **சரஸ்வதி மஹால் லைபரேரி**யிலுள்ள ஏட்டுச் சுவடிகளுடன் ஒப்பிட்டு என் சிற்றறிவு சென்ற அளவிலே கச்சி ஆனந்த ருத்திரேசர் பதிகம், திருத்தொண்டர் திருநாமக்கோவை, திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு, சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு இவைகட்குக் குறிப்புரைகள் எழுதிச் சேர்த்துள்ளேன். ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர் மாலைக்கு அடியேனுக்கு முன்பு இவ்வாதீனத்திலே ஆதீன வித்து

வாகை இருந்து விளங்கிய வடமொழி தமிழ்மொழி ஆகிய இருமொழிப் பெரும்புலமையும் ஆங்கிலப் புலமையும் ஒருங்கே பெற்ற பல்கலைப்புலவர் ஸ்ரீ சிதம்பர ராமலிங்க பிள்ளை அவர்கள் எழுதிய பதவுரையையும் சேர்த்து முதற் பகுதியாக இவை வெளி வருகின்றன. ஏனைய பிரபந்தங்களும் விரைவில் ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் அச்சிடப்பட்டு வெளிவர சித்தமாகவுள்ளன.

வடமொழி கற்போருக்கும் பயனளிக்கும் வகையில் ஸ்ரீ அரதத்த சிவாசாரியர் அருளிய 'சுலோக பஞ்சகமும்' இப்பதிப் பில் தேவ நாகரியிலே அச்சிட்டுச் சேர்க்கப்பட்டுளது. குணங் கொண்டு கோதாட்டுதல் அறிஞர் கடன்.

திருவாவடுதுறை
22—4—50.

த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை,
ஆதீன வித்துவான்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கச்சி ஆனந்த ருத்திரேசர் பதிகம்

ஐந்தையா றினைய டக்கி யருந்தவம் புரியா ரேனும்
வந்தையா வெனவெல் லோரும் வணங்கிட வாழ லாமால்
முந்தையா றிரண்டு தன்ம முதல்விசெய் மூதூர் வாழும்
எந்தையா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. 1.

குறிப்புரை :— ஐந்தை—ஐந்து அவாவையும். ஆறினை—வழியை. ஆறு—வழி. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் உட்பகை ஆறினையும் எனினும் பொருந்தும். ஐந்தையும், ஆறினையும் முற்றும்மைகள் விகாரத்தாற் றொக்கன. 'களிறுன வைந்தும் வயமா வடக்கி' என அருளியதுங் காண்க. எல்லோரும் வந்து ஐயா என வணங்கிட வாழலாம் எனக் கூட்டுக. ஆனந்த ருத்திரேசரை இறைஞ்சி னோர்க்கே அவ்வாழ்வு கூடும் என்றபடி. தவம் புரியாரேனும் உம்மை இழிவு சிறப்பு. தவம் புரிதல் வேண்டும் என்பது குறிப்பு. முந்து—முற்பட்டு. ஐ ஆறு இரண்டு தன்மம்—முப்பத்திரண்டு அறங்கள்; அவை விரிந்த நூலில் காண்க. முதல்வி—உமாதேவியார். மூதூர்—பழமையாகிய நகரம்; காஞ்சி. காஞ்சிபுரத்தில் உள்ள பலசிவ தலங்களுள் ஆனந்த ருத்திரேசம் ஒன்று. நூற்றுப்பதினெட்டு உருத்திரர்களுள் முதல்வராகிய ஆனந்தருத்திரரால் பூசித்து வழிபடப் பட்டமையின் சிவபிரான் ஆனந்த ருத்திரேசர் எனப் பெயர் பெற்றார். அப்பெருமான் வீற்றிருந்தருளுந் தலமாதலின் அஃது அப் பெயர் பெற்றது.

குடங்களிற் பணைத்த ணைந்த கொங்கைமால் களிறு மல்குற்
படங்களுங் கொடுமின் ஞர்செய் பருவரல்பாற்றலாமால்
மடங்களைந் தறிவான் மிக்க மாதவர் மனம்போற் காஞ்சி
இடங்கொளா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. 2.

குறிப்புரை :— குடங்கள்ன்—குடங்களைப்போல, ஐந்தாவது ஒப்புப்பொருள். பணைத்து—பருத்து. மால்—பெருமை, மயக்கம். களிறு—யானை. மகளிர் மார்பிடத்தை யானை மத்தகம் என்பது மரபு. கொங்கைகளாகிய களிற்றையும் அல்குலாகிய படப் பாம்பையுங் கொண்டு மகளிர் துன்புறுத்துவர். மின்னார்—மின்னற் கொடிபோன்ற பெண்கள். பருவரல்—துன்பம். பாற்றலாம்—அழிக்கலாம். மடம் களைந்து—அறியாமையைப் போக்கி. மாதவர்—பெரிய தவத்தினையுடையோர். தவசிகள் உள்ளம்போன்ற தூய காஞ்சி என்க. ஆனந்த ருத்திரேசரை இறைஞ்சினோர் பெண்கள் காரணமாக வருகின்ற காமத்துன்பத்தைக் கெடுத்து வாழ்தல் இயலும் என இப்பாடல் கூறுகின்றது.

வருந்தலா தெண்ணெண் கல்வி வாய்க்குமெண் செல்வப் பேறு
பொருந்தவா யுகங்க ணூறும் புகழுடன் பொலியலாமால்
திருந்தவால் வளையு முத்துஞ் செய்தொறுஞ் செறிதென் காஞ்சி
இருந்தவா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. 3.

குறிப்புரை :— எண்ணெண் கல்வி—அறுபத்து நான்கு கலைஞானங்கள். எண் செல்வப்பேறு—மதிக்கத்தக்க செல்வப்பேற்றினை. ஐசுவரியம் எட்டு எனலும் ஆம். அவை:—அரசு, மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை என்பன. பொருந்து அவா—மனத்திற்கொண்ட விருப்பங்கள். யுகங்கள் நூறு—நூறு ஆண்டு. மக்கட்குரிய பூரண ஆயுள்.

யுகம்—ஊழி. அஃது இவ்விடத்து ஆண்டின்மேல் நின்றது. சூரபன்மன் முதலிய பெருந்தவம் செய்தோர் பெற்றுள்ளமை போலப் பல ஊழிகள் எனினும் பொருந்தும். வால் வளை—வெள்ளிய சங்குகள். செய் — வயல். செறி — நிறைந்த. தென்—அழகு.

மக்களுடம்பு எடுத்த உயிர்கட்கு இன்றியமையாதன கல்வி, செல்வம், இஷ்டசித்தி, பூரண ஆயுள், புகழ் என்பன. இவைகள் எல்லாவற்றையும் ஆனந்த ருத்திரேசரை இறைஞ்சினோர் பெற்று வாழ்வார். ஆகலின் நன் முயற்சி வேண்டும் என்பது குறிப்பு.

பொறைதவ மறிவொ ழுக்கம் புத்திர மித்தி ராதி
குறைவறு செல்வம் யாவுங் குலவவீற் றிருக்க லாமால்
மறையொலி முரசந் துஞ்சா வளநகர்க் காஞ்சி வாழும்
இறைவனு னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. 4.

குறிப்புரை :— பொறை — பொறுத்துக் கொள்ளுதல். 'காரணம் பற்றியாதல், மடமையானுதல் ஒருவன் தமக்கு மிகை செய்தவழித் தாமும் அதனை அவன்கட் செய்யாது பொறுத்துக் கொள்ளுத'லாம். மித்திரர்—நட்பாளர். குறைவறு செல்வம்—குறைவு படாது நிறைந்த செல்வம். மறை—வேதம். அவை: இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன. வடமொழி வேதங்களும், தேவார திருவாசக முதலிய தமிழ் வேதங்களும் மிக்கொலிப்பன என்றபடி. மறை யொலி துஞ்சா, முரசவொலி துஞ்சா எனத் தனித்தனிக் கூட்டுக, துஞ்சா-தூங்காத: இடைவிடாத என்றபடி. முரசம்—பேரிகை. மண முரசு, கொடை முரசு, வென்றி முரசுகள் என்றும் உறங்கா. எனவே, காஞ்சியில் இடந்தொறும் இடந்தொறும் இம் மும்முரசுகளும் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டே யிருப்பன ஆம். வைதிக வொழுக்கமும் சைவ தவ வொழுக்க

மும் மிக்க பெரியோர் செய்யும் வேதவொலிகளும் தேவார திருவாசக முதலிய தமிழ்மறை யொலிகளும் இடைவிடாது முழங்குவதும் இக் காஞ்சியிலே என்க.

ஆசைவே ரகழ்ந்து வெண்ணி றஞ்செழுத் தக்க மாலை
பூசியுச் சரித்துப் பூண்ட புனிதரோ டிணங்க லாமால்
யோசனை கமழுய் யான முடுத்திடுங் காஞ்சி யூர்வாழ்
ஈசனு னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. 5.

குறிப்புரை :— ஆசை—விருப்பம். பெண், பொன், மண் ஆசைகள். இதனைப் பத்தாம் செய்யுளிற் காண்க. வேர் அகழ்ந்து—வேரோடு தோண்டி. வெண்ணிறு பூசி, அஞ்செழுத்து உச்சரித்து, அக்கமாலை பூண்ட புனிதர் என நிரலே கூட்டுக. 'அஞ்செழுத்துந் திருநீறுங் கண்டிகையும் பொருளாக் கொண்ட நாயன்மார் திருக்கூட்டம்' என அருளியதுங் காண்க. வெண்ணிறு அஞ்செழுத்து அக்கமாலை என்பன தூய்மை யுடையன. பேணுவாரைத் தூய்மை செய்வன. புனித மில்லாதவ ராயினும் போற்றுவாரைப் புனிதப்படுத்துவன: பெருமை அளிப்பன. வேர் அகழ்ந்து என்றது தகாதன மேற் செல்லும் விருப்பத்தை வேரோடு களைந்து என்றபடி, தக்க வைகளில் விருப்பம் செல்லலாம். அது குற்றமாகாது. வீடும் வேண்டா விறலினரா யிருத்தல் அரிது.

பானந்தங் கையி லேந்தும் பைந்துழாய் மார்பன் முன்னும்
வானந்தங் கமரர் யாரும் வணங்கவாழ்ந் திருக்க லாமால்
கானந்தண் பொழிலி லாறு கால்செயுங் கச்சி மூதூர்
ஆனந்த ருத்தி ரேச னடித்துணை யிறைஞ்சி னோர்க்கே. 6.

குறிப்புரை :— பால் நந்து—பால் போலும் வெண்ணிற மான சங்கு, அது பாஞ்சசன்னியம். துழாய் மார்பன்—திரு

மால். வானம் தங்கு அமரர்—விண்ணுலகிலுள்ள தேவர். முன் ஆம்—முதலாகவுள்ள. தண் பொழிலில் ஆறுகால் கானம் செயும் கச்சி மூதூர் எனக் கூட்டுக. தண் — குளிர்ச்சி. பொழில்—சோலை. ஆறுகால்—ஆறுகால்களையுடைய வண்டினங்கள். ஷட்பதம் என்ற வடமொழிப் பெயரையுங் காண்க. அடித்துணை—திருவடிகளிரண்டையும்.

கங்கணுன் குள்ளான் முன்னுங் கருமமுங் காரா னூர்தி
செங்கையார் பாசந் தன்னுற் சிமிழ்த்தலுந் தீர லாமால்
அங்களா லுயர்ந்த காஞ்சி யகநக ரமர்ந்து வாழும்
எங்களா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. 7.

குறிப்புரை :— கம் கள் நான்கு உள்ளான்—தலைகள் நான்காகப்பெற்ற பிரமதேவர்: நான்முகக் கடவுள் என்க. முன்னும் கருமம்—கருதுங் காரியம்: அது படைத்தல். கார் ஆன் — கரிய எருமைக்கடா. ஊர்தி — வாகனம். ஆர்—பொருந்திய. பாசம்—காலபாசம். அது கயிறு வடிவிலமைந்த ஒரு ஆயுதம். சிமிழ்த்தல்—இறுகப்பற்றுதல். அம் களால்—அழகுகளால்.

விழிகளான் மாதர் நாளும் விளைத்திடும் வேட்கை யாய
குழிகளா டுற்று வீழுங் கொடுந்துயர் குமைக்க லாமால்
வழிகளார் சோலை சூழ்ந்த மாமதிற் கச்சி வாழும்
எழில்கொளா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. 8.

குறிப்புரை :— வேட்கை — காம விருப்பம். குழிகள் ஆடுற்று—குழிகளிலே தடுமாறி. குமைக்கலாம்—அழிக்கலாம். குமைத்தல்—பதனழியச்செய்தல். எழில்—அழகு.

இருக்கெலா மளவிட் டின்னு மினைத்தென வறிய வெட்டாத்
திருக்குலா வியபே ரின்பச் செழுங்கட றிளைக்க லாமால்
மருக்கலா ரங்கண் மொய்த்த வாவிசூழ் காஞ்சி வாழ்வுற்
றிருக்குமா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. 9.

குறிப்புரை :— இருக்கு—இருக்கு முதலிய வேதங்கள் இனைத்து—இன்ன தன்மையை யுடையது. எட்டா—அணுக முடியாத. திரு—முத்திச் செல்வம். குலாவிய—பொருந்திய. பேரின்பமாகிய செழுங்கடல் என்க. மரு—வாசனை. கல்லாரம்—நீலோற் பலம். மொய்த்த—நிறைந்த. வாவி-தடாகம்.

மாந்தளி ரியலார் செம்பொன் மண்ணெனு மார்வ வாரி
நீந்திமே லான முத்தி நீள்கரை யேற லாமால்
காந்துபொன் மாடஞ் சூழ்ந்த கச்சியம் பதிவாழ் கங்கை
ஏந்துமா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. 10.

குறிப்புரை :— மாந்தளிர் இயலார்—மாந்தளிர்போலும் மென்மையான மேனி யழகையுடைய மெல்லியலார். ஆர்வம்—ஆசை. வாரி—வருவாய். பெண் ஆசை, பொன் ஆசை, மண் ஆசை ஆகிய ஒவ்வொன்றுமே கடல் போன்றது. மாந்தர் அமிழ்ந்து தொலைய இவற்றுள் ஏதேனும் ஒன்றே அமையும். இம் மூன்று கடலினும் ஒரு சேர அமிழ்ந்துவோர் எவ்வாறு கரைசேர்வர். அவரும் உய்ய வேண்டின் ஆனந்த ருத்திரேசரை வணங்கி உய்யக் கடவர் என்றபடி. காந்து பொன்-புடமிட்ட பொன் என்க. கங்கை ஏந்தும்—கங்கை நீரைச்சுமந்த. கம் கை யேந்தும்—பிரம கபாலத்தைத் திருக்கரத்து ஏந்தின ,

ஆனந்த மலைபோ லோங்கு மம்பலத் துமையா ணங்கை
ஆனந்த மகிழ்ச்சி பூப்ப வானந்த வமிழ்த மூறி
ஆனந்த நிருத்தஞ் செய்யு மங்கணன் கச்சி மூதூர்
ஆனந்த ருத்தி ரேச னடியிணைக் கன்பு செய்வாம். 11.

குறிப்புரை:— மலை போல் ஆனந்தம் ஓங்கும்-மலையைப் போன்று மிகுதியாக ஆனந்தம் பெருகுகின்ற. அம்பலம்— பொன்னம்பலம். மகிழ்ச்சி பூப்ப — மகிழ்ச்சி கொள்ள. ஆனந்தமாகிய அமிழ்தம். ஆனந்த நிருத்தம் — ஆனந்த தாண்டவம். அங்கணன் — நெற்றிக்கண்ணையுடைய சிவ பெருமான்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்டதேவர் மிளிர்கழல் வாழ்க.

ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் மலரடி வாழ்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

செய்யுண் முதற்குறிப்பகராதி.

ஆசைவேரக	—	5
ஆனந்தமலே	—	11
இருக்கேலா	—	9
ஐந்தையாறினே	—	1
கங்கணன்கு	—	7
குடங்களிற்	—	2
பானந்தங்	—	6
போறைதவ	—	4
மாந்தளிரிய	—	10
வருந்தலாதேண்	—	3
விழிகளான்	—	8

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர் திருநாமக் கோவை

(குறிப்புரை.)

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.

விக்குருதி — சித்திரை — ஆயிலியம்.

1950.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர் திருநாமக் கோவை

காப்பு

மெய்யன்பர் நாமமெல்லாம் வெவ்வேறு போற்றிடவைங்
கையன் திருவடியே காப்பு.

நூல்.

தில்லைவா ழந்தணர்கள் சீர்நீல கண்டனார்
இல்லை யளித்த வியற்பகையார்—தொல்லை

இளையான் குடிமாறர் மெய்ப்பொருளா ரென்றும்
இளையா விறன்மிண்ட ரின்பம்—அளவுமமர்

நீதி யெறிபத்தர் நீண்டபுக ழேனாதி
நாதர்திருக் கண்ணப்பர் நற்கலயர்—மேதகுசீர்

மானக்கஞ் சாறரரி வாட்டாய ராயனார் ஞாய
ஞானத் திருமூர்த்தி நாயனார்—மேன்மை

முருகர் பசுபதியார் முன்னாளைப் போவார்
திருசி திருக்குறிப்புத் தொண்டர்—மருவுமறைச்

சண்டீசர் வாகீசர் தக்க குலச்சிறையார்
கொண்ட மிழலைக் குறும்பனார்—தொண்டுசெயும்

நீள்காரைக் காலம்மை யப்பூதி நீலநக்கர்
மூளு நமிநந்தி முத்தமிழை—ஆளும்

திருஞான சம்பந்தர் செய்யகலிக் காமர்
அருண்மூலர் தண்டி யடிகள்—வருமூர்க்கர்

சோமாசி மாறனர் சாக்கியனர் சூழாக்கூர்
நாமார் சிறப்புலியார் நற்செருண்டின்—ஏமச்

சிறுத்தொண்டர் சேரமான் செய்யகண நாதர்
விறற்களந்தைக் கூற்றுவனர் விஞ்சைத்—திறத்துமிகும்

பொய்யடிமை யில்லாப் புலவர் புகழ்ச்சோழர்
மொய்கொ ணரசிங்க முனையரையர்—ஐயரதி

பத்தர்கலிக் கம்பர் கலியர் பகர்சத்தி
கைத்தபுல னையடிகள் காடவர்கோன்—மொய்த்தகணம்

புல்லனர் காரிநெடு மாறர்புகழ் வாயிலார்
நல்ல முனையடுவார் நாயனர்—மல்குகழற்

சிங்க ரிடங்கழியார் தஞ்சைச் செருத்துணையார்
கொங்கார்புகழ்த்துணையார் கோட்புலியார்-அங்கணற்குப்

பத்தராய்த் தாழ்வார் பரமனையே பாடுவார்
சித்தஞ் சிவன்பாலே சேர்த்துள்ளார்—நித்தமும்

முத்திநெறி காட்டு முதல்வர் முழுதுணர்ந்தோர்
பித்தனுறை யாரூர்ப் பிறந்தார்கள்—அத்தனையே

முப்போதுந் தீண்டுவார் முழுநீறு பூசுவார்
அப்பாலு மீச னடிச்சார்ந்தார்—மெய்ப்பூசல்

மானியார் நேசனுர் வாழ்செங்கட் சோழனுர்
பான்மையார் நீலகண்டப் பாணனுர்—மேன்மைச்

சடையரிசை ஞானியிவர் தம்மையெல்லாஞ் சேர்த்துத்
தொடையாகப் பாடியவன் ௫ெண்டர்—அடியிணைகள்

சிந்தனைசெய் திந்தத் திருநாமக் கோவைதனை
மந்திரமாக் கொண்டு மயிர்சிலிர்த்து—நைந்துருகி

மெய்யன்பா லென்றும் விளம்பப் பெறுவார்கள்
கைதவமும் புல்லறிவுங் கற்பனையு—மையலுந்தீர்ந்

தத்துவிதா னந்த வகண்டபரி பூரணத்தின்
நித்தியமா வாழ்வார் நிசம்.

குறிப்புரை :— மெய்யன்பர் — உண்மை நாயன்மார். சீர்—சிறப்பு. இல்லை அளித்த—மனைவியைக் கொடுத்த. தொல்லை-பழைய. இளையா-தோல்வியில்லாத. ஞானத்திரு—சிவஞானச்செல்வம். துரிசு இல்-குற்றமில்லாத. மருவு-பொருந்திய. மறை—வேதம். வாகீசர்—திருநாவுக்கரசு நாயனுர். முத்தமிழ்-இயல், இசை, நாடகத் தமிழ். செய்ய-செம்மையாகிய. நாம் ஆர்—அச்சமிக்க. ஏமம்—பாதுகாப்பு. விறல்—வலிமை. விஞ்சை—வித்தை. மொய்-வலிமை. கைத்தபுலன்-ஐம்புலனையும் வெறுத்த. மொய்த்த—நிறைந்த. மல்கு—நிறைந்த. அங்கணற்கு—நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானுக்கு. நித்தமும்—எப்பொழுதும். அத்தன்—சிவபெருமான். மானியார்—மங்கையர்க்கரசியார். தொடை-மாலை, வரிசை. வன்௫ெண்டர் — ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனுர். ஐயர் — தலைவர். மயிர் சிலிர்த்தல், நைந்து உருகல் முதலியன மெய்ப்பாடுகள். நைந்துருகல்—மனங்கசிந்து உருகுதல். கைதவம்—வஞ்சகம். புல்லறிவு—கீழ்ப்பட்ட (இழிந்த) உணர்ச்சிகள். மையல்—மயக்கம். அத்துவிதம்-இரண்டறக்கலத்தல்: சுத்தாத்துவிதம்.

திருத்தொண்டர் திருநாமக் கோவை
முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு

(குறிப்புரை.)

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.

விக்குருதி—சித்திரை—ஆயிலியம்

1950.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு.

ஆனந்த மானந்தந் தோழி—கம்பர்
ஆடுந் திருவிளை யாட்டினைப் பார்க்கில்
ஆனந்த மானந்தந் தோழி.

ஒன்றுவிட் டொன்றுபற் ருமல்—என்றும்
ஒன்றுவிட் டொன்றினைப் பற்றவல் லாருக்
கொன்றுமி ரண்டுமல் லாமல்—நின்ற
ஒன்றினை வாசக மொன்றில ளிப்பார் (ஆனந்தம்)

குறிப்புரை:— ஒன்றை விட்டு ஒன்று பற்ருமல்—உலகத்துப் பொருள்களில் ஒன்றை விட்டு மற்ருென்றில் ஆசை கொள்ளாமல். என்றும்—எப்பொழுதும். ஒன்று விட்டு—உலக ஆசையை விட்டு. ஒன்றினை—பரம்பொருளை. ஒன்றும் இரண்டும் அல்லாமல் நின்ற ஒன்றினை—சுத்தாத்துவித முத்தியாகிய இரண்டறக் கலத்தலை. வாசகம் ஒன்றில் அளிப்பார்—குருவடிவாகி வந்து உபதேச மாத்திரையில் கொடுத்தருளுவர். வாசகம் ஒன்று—பெரும்பொருள். அது மகா வாக்கியம்.

இரண்டு வினையால் விளைந்த—வகை
இரண்டையுங் காட்டியென் சென்னியின் மீதே
இரண்டு சரணமுஞ் சூட்டி—அஞ்சில்
இரண்டை யிரண்டி லடக்கவல் லாராம் (ஆனந்தம்)

குறிப்புரை :— இரண்டு வினை — நல்வினை தீவினைகள். விளைந்தவகை இரண்டு—இன்பத்துன்பங்கள். பிறப்பிறப்புக் கள் எனினுமாம். சென்னியின்மீது இரண்டு சரணமுஞ் சூட்டல்—திருவடி தீட்சை செய்தல். அஞ்சு — திருவைந் தெழுத்து. அபக்குவத்தினாலே ய—ஆன்மாவானது, ம— மலத்துடனே கூடி, நகாரமாகிய திரோதாயி தாரகமாகப் பொய்யை மெய்யென்று மாறுபாடாகக் கருதிச் சனன மரணங்களிலே சுழன்று நிற்கும்.

"சிகார வகாரஞ் சிவனொடு சத்தி
யகார மதுவே ஆன்மாவாகும்
நகார மதுவே நற்றிரோ தாயி
மகார மதுவே மலமென லாமே"

இரண்டை-மல வெழுத்துக்களை: அவை, நகார மகாரங்கள். இரண்டில் அடக்குதல்—பக்குவம் வந்தவுடனே ம—மலம். சி. சிவத்திலே ஒடுங்கிப்போம். நகாரமாகிய திரோதாயி வ— அருளிலே ஒடுங்கிப்போம். ய—ஆன்மாவும், வகாரமாகிய அருளும் ஒன்றாய்ப்போய் வசி ஆம். உதாரணம் வருமாறு:— சூரியன், கிரணம், கண், விளக்கு, இருள் ஆக ஐந்து. சூரி யனைப் போலும், சி-சிவன்; கிரணத்தைப்போலும், வ-அருள் கண்ணைப்போலும், ய ஆன்மா; விளக்கைப்போலும், ந-திரோ தாயி; இருளைப்போலும், ம-மலம்.

இருளிலே கலந்த கண் விளக்குத் தாரகமாகப் பழுதை யைப் பாம்பென்றும், இப்பியை வெள்ளியென்றும், குற்றி யைப் பிள்ளை யென்றும் திரிவுகாட்சியாகக் கண்டுகொண்டே யிருக்கும். ஆதித்தப் பிரகாசம் வந்தவுடனே இருள் ஒளியிலே அமிழ்ந்திப்போம். விளக்கு சத்தி கெட்டுப்போம். கண்ணும் ஒளியும் ஒன்றாகிப் போம். (பஞ்சாக்கர சிந்தனை)

"அஞ்செழுத்து மண்ணலருள் ஆன்மாத் திரோதமலம்
விஞ்சி நமத்துரந்து மெய்யருள்வத்—தஞ்சச்
சிகாரத்தில் யவ்வைவிடுந் தீதிலா வின்பப்
புகாரிற் புகுந்தருந்தப் போய்" (துகளறு போதம்)

மூன்றுல கும்படைப் பாராம்—அந்த
 மூன்றுல கும்முட னேதுடைப் பாராம்
மூன்று கடவுளா வாராம்—அந்த
 மூன்று கடவுளர் காணவொண் ணாராம் (ஆன)

குறிப்புரை:—மூன்றுலகு—மண் விண் பாதல முதலியன: அவை மேல் கீழ் நடு என்பன: எனவே, பதினான்கு உலகை யுங் குறிக்கும். படைத்தல்—பிரமனை அதிட்டித்துநின்று சிருட்டித்தல். துடைத்தல்—அழித்தல்: உருத்திரனை அதிட்டித்து நின்று அத்தொழிலியற்றல். மூன்று கடவுள்—அயன், அரி, உருத்திரன்.

நாலு வருணம்வைப் பாராம்—பின்னும்
 நால்வகை யாச்சிர மங்கள்வைப் பாராம்
நாலுபா தங்கள்வைப் பாராம்—அந்த
 நாலுக்கு நாலுப தமும்வைப் பாராம் (ஆன)

குறிப்புரை:— நாலு வருணம் — அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பன. நால்வகை ஆச்சிரமங்கள்— பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன. நாலு பாதங்கள் — சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. நாலுபதம் — சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியம் என்பன.

அஞ்சு மலமஞ் சவத்தை—பூதம்
 அஞ்சுதன் மாத்திரை யஞ்சிந் திரியம்
அஞ்சு தொழிலஞ்சு மாற்றி—எழுத்
 தஞ்சுமஞ் சாக வமைக்கவல் லாராம் (ஆனந்)

குறிப்புரை :— அஞ்சுமலம்—ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி என்பன. இதனை "மல மாயை கன்ம மாயேயந் திரோதாயி" என்னுந் திருவிருத்தத்திற் காண்க. மும்மலங்களன்றி "வேறும் இருமலம் எனப்படுவன அச்

சுக துக்கவிளைவுகட்கு எல்லாம் இடமாய் நின்று வியாபக ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களை ஏகதேசப் படுத்துவது என மேற்கூறிப் போந்த மாயாகாரியமும், அவ்வம் மலங்களை அவ்வத் தொழிலிற் படுத்தி பாகம் வருவிக்கும் சிவசத்தியும் ஆம். அவற்றுள் மாயாகாரியம் மாயையில் அடங்குமாயினும், பந்தித்தற்கட்படும் வேற்றுமை பற்றி மாயேய மலம் என வேறுவைத்து எண்ணப்படும். அம்மலங்கட்கு அனுகூலமாய் நின்று செய்யும் சிவசத்தி பராசத்தியின் அடங்குமாயினும், தொழில் வேற்றுமைபற்றி உபசாரத்தால் திரோதாயி என வேறு வைத்து எண்ணப்படும்'' என்பது ஸ்ரீ சுவாமிகள் பொழிப்புரை. அஞ்சவத்தைகள்: சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன. பூதம் ஐந்து: மண், நீர், தீ, வளி, வான் என்பன. தன் மாத்திரை ஐந்து—சுவை யொளி ஊறு ஓசை நாற்றம் என்பன. இந்திரியம் ஐந்து—மெய் வாய் கண் மூக்குச் செவி என்பன. தொழில் ஐந்து—படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்பன. ஆற்றி—செய்து. எழுத்து அஞ்சு—ஸ்ரீ பஞ்சாக்கரம். அஞ்சாக அமைத்தல்—சி—சிவன், வ—அருள், ய—ஆன்மா, ந—திரோதாயி, ம—மலம் எனக் குறியீட்டானமைத்தல்.

ஆறாறு தத்துவக் கூட்டம்—உடன்
    ஆறத்து வாக்களு மாதார மாறும்
ஆறுகுற் றங்களு நீங்க—இரண்
    டாறின் முடிவின டனஞ்செய் வாராம் (ஆனந்)

குறிப்புரை:— ஆறாறு தத்துவம்—முப்பத்தாறு தத்துவங்கள்: அவை ஆன்மதத்துவம் 24, வித்தியாதத்துவம் 7, சிவதத்துவம் 5. ஆக 36. அத்துவா—வழி. ஆறு அத்துவா—மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை முதலியன. ஆதாரம் ஆறு—மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பன. குற்றம் ஆறு—காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன. இரண்டு ஆறின் முடிவு—துவாதசாந்தப் பெருவெளி.

ஏழு புவனப் பரப்புங்—கடல்
ஏழுஞ் சிகரிக ளேழும் பெருந்தீ
வேழும் பிறவிக ளேழும்—இசை
ஏழும் படைத்த விறைவ ரிவராம் (ஆனந்தம்)

குறிப்புரை:— ஏழுபுவனம்—ஏழுலகு: அவை மேல் உலகம் ஏழு—பூலோகம், புவலோகம், சுவலோகம், மகா லோகம், சனலோகம், கந்தர்வலோகம், சத்தியலோகம் என்பனவும்: கீழ் உலகம் ஏழு: அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதலம் என்பனவும் ஆம். கடல் ஏழு: உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் என்பன. சிகரி—மலை: அவை; கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம் என்பன. தீவு ஏழு—நாவலந்தீவு, இறலித்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத்தீவு, புட்கரத்தீவு, இலவந்தீவு, தெங்கந்தீவு என்பன. பிறவிகள் ஏழு—தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, நிற்பன முதலியன. இசை ஏழு—குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன.

எட்டு வடிவுமா வாராம்—அந்த
எட்டு வடிவுக்கு மெட்டரி யாராம்
எட்டுக் குணமுடை யாராம்—பத்தி
எட்டு முடையோ ரிதயத் துளாராம் (ஆனந்தம்)

குறிப்புரை:— எட்டுவடிவு—அஷ்டமூர்த்த சொரூபம்: மண்-நீர்-அனல்-வளி-வான்-திங்கள்-ஞாயிறு-ஆன்மா என்பன எட்ட அரியார்—எட்டுதற்கு அருமையானவர். எட்டுக் குணம்—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, வரம்பிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பன. எண்வகைப் பத்தி—கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு முதலியன. இதயம்—உள்ளம்.

"வாய்மை யொழுக்கந் தவஞ்சீலம் வணக்கம் பொறுமை யறிவடக்கந் தூய்மை தவரு மெய்யடியார்" என அருளியமையும் சிந்திக்கத்தக்கன.

ஒன்பது மொன்பது மொன்றும்—மற்றை
ஒன்பது முப்பது மொன்பது மொன்றும்
ஒன்பது மொன்பது மொன்றும்—பின்னும்
ஒன்பது மானவைக் கப்புறத் தாராம். (ஆனந்தம்)

குறிப்புரை :— 96 தத்துவங்கள்: அவை விரிந்த நூல்களாற் றெளிக.

பத்துத் திசையுடை யாராம்—பத்துப்
பத்துப்பத் தாந்திருப் பேருடை யாராம்
பத்துக் கரமுடை யாராம்—தவம்
பத்தினி லொன்றுபத் தாகச்செய் வாராம்.
(ஆனந்தம்)

குறிப்புரை :— பத்துத்திசை—பத்துத்திக்குகள். திசை உடை—திக்காகியஆடை: திகம்பரன் என்றமையும் காண்க. பத்துப்பத்துப் பத்தாம் திருப்பேர் — ஆயிரந் திருநாமங்கள். "பேராயிரம் பரவி வானோரேத்தும் பெருமானை" "பேராயிரங்க ளேத்தும் பெரியவன் காண்" என்பது தேவாரம். பத்துக்கரம் — பத்துக்கைகள். 'திகட சக்கரச் செம்முக மைந்துளான்' என்றார் கந்தபுராணத்தும். ஒன்று பத்து—தசகாரியம். தவம் பத்து—அபுக்தி பூருவம். புத்தி பூருவம், உபாயச்சரியை, உபாயக்கிரியை, உபாய யோகம், உபாய ஞானம், உண்மைச் சரியை, உண்மைக்கிரியை, உண்மை யோகம், உண்மைஞானம் ஆகப் பத்து. ஒன்று பத்தாகச் செய்தல்—இவற்றுள் ஒன்பது சிவ புண்ணியங்களும் ஆன்மா தானாகச் செய்து முடித்தபின்பு சிவ பெருமான் ஞானாசாரியராக எழுந்தருளி வந்து உண்மை ஞானம் என்னும் சிவ புண்ணியத்தைக் கொடுப்பர். அவ்வுண்மை ஞானம் ஒன்றும்

பத்துவிதமாயிருக்கும். அவை வருமாறு :— தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி; ஆன்ம ரூபம். ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி; சிவரூபம், சிவதரிசனம். சிவயோகம், சிவபோகம் ஆகப் பத்து. இவற்றுள் ஒன்பதையும் உயிர் உண்டு கழிப்பன. சிவபோகம் ஒன்றை மாத்திரம் ஆன்மா எக்காலும் புசித்துக்கொண்டேயிருப்பன. இதற்குமேல் உயிருக்கு ஊதியம் ஒன்றுமில்லை என்க.

இனி, இவ்வாசிரியரே "பெருந்துறையிற் சிவபெருமா னருளுதலும் பெருங்கருணைப் பெற்றி நோக்கிக், கரைந்து கரைந் திருகண்ணீர் மழைவாரத் துரியநிலை கடந்துபோந்து, திருந்து பெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந், திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ ரடிகளடி யிணைகள் போற்றி" என மாணிக்கவாசக சுவாமி கள் திறத்தும், "எவ்வெவர்கோட் படுபொருளு மஞ்செழுத்தி னடக்கியவற் றியல்பு காட்டி, மெய்வகையஞ் சவத்தையினு நிற்குமுறை யோதுமுறை, விளங்கத் தேற்றி, அவ் வெழுத்தி னுள்ளீடு மறிவித்துச் சிவபோகத் தழுத்தி நாயேன், செய் வினையுங் கைக்கொண்ட வேலப்ப தேசிகன்றுள் சென்னி சேர்ப்பாம்" எனத் தமது ஞானசிரியர் திறத்தும் வைத்துத் தம் சிவானந்த அநுபவ நிலையை வெளிப்படுத்துதல் சிந்திக் கத்தக்கது. இவ்வாறு வெளிப்படுப்பன பலவுள.

ஞானமு ஞேயப் பொருளும்—பற்றும்
ஞாதாவு மில்லையென் பார்க்கரி யாராம்
ஞானமு ஞேயப் பொருளும்—பற்றும்
ஞாதாவு மாய்ப்பகுப் பார்க்குமெட் டாராம்.

(ஆனந்தம்)

குறிப்புரை :— ஞானம்—காட்சி. ஞேயம்—காட்சிப் பொருள். ஞாதா—காண்பான்.

மெய்யி லணிவதும் பாம்பு—மலை
வில்லினி ஞணைய் விசிப்பதும் பாம்பு
கையிற் பிடிப்பதும் பாம்பு—அவர்
காட்டின நாடகம் காண்பதும் பாம்பு. (ஆனந்தம்)

குறிப்புரை :— மெய்—திருமேனி. மலைவில்—மேருமலையாகிய வில். நாண்—கயிறு. விசிப்பது—கட்டுவது. நாடகம்—திருக்கூத்து. காண்பது பாம்பு — தரிசிப்பது பதஞ்சலி முனிவர்.

நாதத் துடியி னடிப்பும்—மெல்ல
நடந்து நடந்து நடிக்கு நடிப்பும்
வேதம் படிக்கும் படிப்பும்—நுதல்
மீது விளங்கு குறுவேர்ப் பொடிப்பும் (ஆனந்தம்)

குறிப்புரை :— நாதம்—ஒலி. துடி—உடுக்கை. நுதல்—நெற்றி.

கையிற் கபாலத் தழகுந்—திருக்
காலினிற் பாதுகை சேர்த்த வழகும்
மெய்யணி நீற்றி னழகும்—மையல்
மீறுங் குறுநகை மூரலழகும் (ஆனந்தம்)

குறிப்புரை :— கபாலம்—பிரமதேவருடைய மண்டையோடு. பாதுகை—திருவடிநிலை. குறுநகை—மந்தகாசம், புன்முறுவல்.

உடுப்பது காவி யுடையாம்—மறை
ஓதிமந் தேடுஞ் சிரமேற் சடையாம்
எடுப்பது பிச்சை யமுதாம்—மார்பில்
ஏற்பது காமாட்சி கொங்கைச் சுவடாம் (ஆனந்தம்)

குறிப்புரை :- மறை ஓதிமம்—பிரமதேவராகிய அன்னப் பறவை.

திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு முற்றிற்று.

ஸ்ரீ மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.
ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் மலரடி வாழ்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆளுடைய பிள்ளையார்.

பரசமய கோளரியைப் பாலறு
வாயனைப்பூம் பழனஞ் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப்
பெருமானைத் தேய மெல்லாங்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளுங்
கவுணியர்தங் குலதீ பத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமத
விளங்களிற்றை விரும்பி வாழ்வாம்.

ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர்.

பண்ணிசைவெம் பரிதிமதி திலதயிலந்
தீயிரும்பு பாணி யுப்பு
விண்ணனில முடலுயிர்நீ நிழலுச்சிப்
பளிங்குபகல் விளக்குப் பானீர்
கண்ணிரவி யுணர்வொளிபோற் பிறிவரிய
வத்துவிதக் கலவி காட்டித்
தண்ணளிவைத் தெனையாண்ட துறைசைநமச்
சிவாயகுரு சரணம் போற்றி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ அரதத்த சிவாசாரிய சுவாமிகள்

அருளிச்செய்த

சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு.

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.

விக்குருதி — சித்திரை — ஆயிலியம்.

1950.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ அரதத்த சிவாசாரியர்

சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு.

உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாகலிற்
றசரதன் மதலை தாபித் தேத்தலிற்
கண்ணன் கயிலையி னண்ணிநின் றிரப்பப்
புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற்
றனது விழியுட னொராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலின்
ஆங்கவற் கிரங்கி யாழியீந் தருடலின்
ஐங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலின்
அமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடுதலிற்
றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலின்
அவுணர் முப்புர மழியவில் வாங்கலிற்
றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்
றனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மாநுட படங்கலை வலிதபக் கோறலின்
மாயோன் மகடூஉ வாகிய காலைத்
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலின்
ஆழ்கடல் வரைப்பி னொன்றோ ரநேகர்
அன்புமீ தூர வருச்சனை யாற்றலின்
நான்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலின்

ஐயிரு பிறப்பினு மரியருச் சித்தலின்
இருவரு மன்னமு மேனமு மாகி
அடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறுப்புழி முகுந்தப் புத்தேள்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலின்
அயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுள்
உம்பர்க ளெவர்க்கு முயர்ந்தோன்
என்பது தெளிக வியல்புணர்ந் தோரே.

குறிப்புரை :— உயர் காயத்திரி—மேலான காயத்திரி மந்திரம். உரிப்பொருள்—உரிய பொருள். "தத்ஸவிதுர் வரேண்யம்பர்கோ தேவஸ்ய தீமஹி த்யோயோந: ப்ரசோதயாத்" என்பது காயத்திரி மந்திரம். இக்காயத்திரி மந்திரத்தாற் பிரதிபாதிக்கப்படும் பொருள் சிவபெருமானே என்பது சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்தில் ஸ்ரீ அரதத்தாச்சாரிய சுவாமிகளால் வச்சிரலேபனம் செய்யப்பட்டிருத்தல் காண்க. தசரதன் மதலை—ஸ்ரீ இராமன். கமலம்—தாமரை. புது மலர்—அன்றலர்ந்த பூ. ஆழி—சக்கராயுதம். ஐங்கணைக் கிழவன்—மன்மதன். ஐங்கணை—ஐந்து மலரம்புகள்: அவை தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என்பன. அழல் விருந்து—நெற்றிக்கண் ணெருப்புக்கு இரையாக. தென்திசைத் தலைவன் — இயமன். செகுத்து — கோபித்து. அவுணர்—அரக்கர்கள்: அவர் தாரகாக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி என்பவர். முப்புரம்—திரிபுரம்: மும்மதில்: அவை பொன் வெள்ளி இரும்பாலாகியவை. ஆகாயத்திற் பரந்து செல்லும் இயல்புள்ளவை. வில் வாங்கல் — வில்லை வளைத்தல்.

தனஞ்சயன்-அருச்சுனன். தன்படை-பாசுபதாஸ்திரம். மானுட மடங்கல்—நரசிங்கம். வலிதப--வலிகெட. தகர்த்து—நாசஞ் செய்து. மாயோன்—கரிய மேனியையுடைய திருமால். மகடூஉ—பெண்: மோகினி வடிவம். சாத்தன்—ஐயனர்: அரிகரபுத்திரர். நான்கு இரு செல்வம்—எண்திரு; அஷ்ட ஐசுவரியம்: அவை இராசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை என்பன. இருவர்—பிரம விஷ்ணுக்கள். ஏனம்—பன்றி. அழற்பிழம்பு—அக்கினி மலை. வியாதன்—வியாசமுனிவர். பொய்புகல்—பொய் வார்த்தை சொல்லிய. கை தம்பித்தல்—உயர்த்திய கை எடுத்தபடியே மடக்க முடியாமல் வருந்தி நிற்றல். இதனை;

"ஐயிரு புராணநூல் அமலற் கோதியும்
செய்யபன் மறைகளும் தெரிந்தும் மாயையால்
மெய்யறு சூள்புகல் வியாதன் நீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்."

என்ற கந்தபுராணச் செய்யுளிற் காண்க. இறுப்புழி-அழித்த காலத்தில். புத்தேள்—கடவுள். மால்—பெரிய. விடை—இடபம். ஞாலம்—உலகம்: பூமி. அயன்—பிரமன். பேணினர்—விரும்பினர், பூசித்தவர். பசுபதி—பசுக்களுக்குப் பதி: உயிர்த்தலைவர்: சிவபெருமான். தனி—ஒப்பற்ற. உம்பர்கள்-தேவர்கள். இயல்புஉணர்ந்தோர்—நல் இலக்கணமுடைய பெரியோர்கள்.

சுலோகபஞ்சக மொழிபெயர்ப்பு முற்றிற்று.

ஸ்ரீ மெய்கண்டதேவர் மிளிர் கழல் வெல்க.

ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் மலரடி வாழ்க.

श्रीः

श्रीमद्धरदत्त शिवाचार्य कृत

श्लोक पञ्चकाख्य

॥ पञ्चरत्न मालिका ॥

गायत्रीवल्लभत्वाद्दशरथतनयस्थापितारााधितत्वा
च्छौरेः कैलास यात्राव्रतमुदित तयाभीष्ठ सन्तानदानात् ।
नेत्रेण स्वेनसाकन्दशशतकमलै र्विष्णुना पूजितत्वा
त्तस्मैचक्रप्रदानादपिच पशुपतिस्सर्वदेवप्रकृष्टः ॥ १ ॥

காயத்ரீவல்லபத்வாத் தசரததநயஸ்தாபிதாராதி தத்வாத்
சௌரே: கைலாஸயாத்ரா வ்ரதமுதித தயாபீஷ்ட ஸந்தானதாநாத்.
நேத்ரேண ஸ்வேநஸாகம் தசசதகமலைர் விஷ்ணுநா பூஜிதத்வாத்
தஸ்மை சக்ரப்ரதாநாத் அபிச பசுபதிஸ் ஸர்வதேவ ப்ரக்ருஷ்ட:

कन्दर्पद्ध्वंसकत्वाद्गरळ कबळनात्काल गर्वापहत्वा
द्दैतेयावासभूत त्रिपुरविदळनाद्दक्षयागजयित्वात् ।
पार्थस्य स्वास्त्रदाना न्नरहरि विजयान्माधवे स्त्रीशरीरे
शास्तुस्संपादकत्वादपि च पशुपतिस्सर्वदेव प्रकृष्टः ॥ २ ॥

கந்தர்ப்பத்வம்ஸகத்வாத் கரளகபளநாத் காலகர்வாபஹத்வாத்
தைதேயாவாஸபூதத்ரிபுரவிதளநாத் தக்ஷயாக ஜயித்வாத்.
பார்த்தஸ்ய ஸ்வாஸ்த்ர தாநாந்நரஹரி விஜயாந்மாதவே ஸ்த்ரீ சரீரே
சாஸ்துஸ்ஸம்பாதகத்வாத் அபிச பசுபதிஸ் ஸர்வதேவப்ரக்ருஷ்ட:

वाराणस्याञ्च पाराशरिनियमि भुजस्तंभना त्प्राक्पुराणां
प्रध्वंसे केशवेनाश्रित वृषवपुषाधारित क्ष्मातलत्वात् ।
अस्तोकै र्ब्रह्मशीर्षैरनिशगळ कृतालंक्रियाभूषितत्वा
द्दानात्प्रज्ञानमुक्त्योरपि च पशुपतिस्सर्वदेव प्रकृष्टः ॥ ३ ॥

வாராணஸ்யாஞ்ச பாராசரிநியமி புஜஸ்தம்பநாத் ப்ராக்புராணும்
ப்ரத்வம்ஸே கேசவேநாச்ரித வ்ருஷவபுஷாதாரிதக்ஷ்மாதலத்வாத்.
அஸ்தோகைர் ப்ரஹ்மசீர்ஷை ரநிசகளக்ருதாலங்க்ரியா
[பூஷிதத்வாத்
தாநாத் ப்ரஜ்ஞாநமுக்த்யோரபிச பசுபதிஸ்ஸர்வதேவ பிரக்ருஷ்ட:

भूमौलोकैरनेकै स्सततविरचिताराधितत्वादमीषा
मष्टैश्वर्य प्रदानाद्दशविधवपुषा केशवेनाश्रितत्वात् ।
हंसक्रोडांगधारि द्रुहिणमुरहरान्विष्ट शीर्षांघ्रिकत्वा
जन्मध्वंसादचभावादपि च पशुपतिस्सर्वदेव प्रकृष्टः ॥ ४ ॥

பூமௌலோகை ரநேகைஸ்ஸததவிரசிதாராதிதத்வாத் அமீஷா
மஷ்டைச்வர்யப்ரதாநாத் தசவிதவபுஷா கேசவேநாச்ரிதத்வாத்
ஹம்ஸக்ரோடாங்கதாரித்ருஹிண முரஹராந்விஷ்ட
[சீர்ஷாங்க்ரிகத்வாத்
ஜந்மத்வம்ஸாத்யபாவாத்அபி ச பசுபதிஸ்ஸர்வதேவப்ரக்ருஷ்ட:

वैशिष्ट्येयोनिपीठायितमुररिपुश्लिष्टभावेन शंभो
स्सस्त्रीकार्द्ध प्रतीकायित हरिवपुषालिंगतत्वेनयद्वा ।
अप्राधान्याद्विशिष्टाद्वयसमधिगमे दानवानामराते
श्शंभोरुत्कृष्टभावादपि च पशुपतिस्सर्वदेव प्रकृष्टः ॥ ५ ॥

வைசிஷ்ட்யே யோநிபீடாயித முரரிபுச்லிஷ்டபாவேந [சம்போஸ்
ஸஸ்த்ரீகார்த்த ப்ரதீகாயித ஹரவபுஷாலிங்க தத்வேநயத்வா
அப்ராதாந்யாத் விசிஷ்டாத்வய ஸமதிகமே தாநவாநாமராதேச்
சம்போருத்க்ருஷ்ட பாவாதபிச பசுபதிஸ்ஸர்வ தேவப்ரக்ருஷ்ட:

॥ पञ्चरत्नमालिका संपूर्णा ॥

ஆளுடைய அரசு.

இடையறுப் பேரன்பு மனமழைவாரு
　　மிணைவிழியு முழவாரத்திண்
படையறுத் திருக்கரமுஞ் சிவபெருமான்
　　றிருவடிக்கே பதித்த வன்பும்
நடையறுப் பெருந்துறவும் வாகீசப்
　　பெருந்தகைதன் ஞானப் பாடற்
றொடையறுச் செவ்வாயுஞ் சிவவேடப்
　　பொலிவழகுந் துதித்து வாழ்வாம்.

ஆளுடைய நம்பி.

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்
　　டாட்கொண்ட வுவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
　　வல்லாள னெல்லா முய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
　　பேரருளின் பெருமா னென்றுந்
திருமணக்கோ லப்பெருமாண் மறைப்பெருமா
　　ளெமதுகுல தெய்வ மாமால்.

ஆளுடைய அடிகள்.

பெருந்துறையிற் சிவபெருமா னருளுதலும்
　　பெருங்கருணைப் பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத்
　　துரியநிலை கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
　　வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ
　　ரடிகளடி யிணைகள் போற்றி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர் மாலை

(பதவுரை.)

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.

விக்குருதி—சித்திரை—ஆயிலியம்

1950.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர் மாலை

கட்டளைக்கலித்துறை.

அறிவே யருட்செல்வ மேநிறை வேயர சேயடியா
ருறவேயென் னாருயி ரேமணி யேயுரு காதநெஞ்சிற்
பிறிவே துரியங் கடந்த சிவானந்தப் பேரமுதச்
செறிவே கருணைப் பிழம்பேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :— அறிவே-ஞானசொருபமா யிருப்பவரே, அருட்செல்வமே - திருவருளாகிய ஐசுவரிய வடிவா யிருப்பவரே, நிறைவே-சர்வ பரிபூரணராயிருப்பவரே, அரசே -தலைவரே. அடியார் உறவே-திருத்தொண்டர்களுக்குச் சுற்றமாய் இருப்பவரே, என் ஆருயிரே-என்னுடைய அருமையான உயிராயிருப்பவரே, மணியே-இரத்தினம் போன்ற பிரகாசரூபரே, உருகாத நெஞ்சிற் பிறிவே-கசியாத மனத்தினின்றும் நீங்கியிருப்பவரே, துரியங் கடந்த சிவானந்தப் பேரமுதச் செறிவே-துரியாதீத நிலையில் அனுபவிக்கப்படும் சிவானந்தமாகிய பெருமைபொருந்திய அமுதத்தின் நிறைவே, கருணைப் பிழம்பே-இரக்கமே வடிவுகொண்டரே, பஞ்சாக்கர தேசிகனே-(திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட தேசிகன் சந்தானத்தில் விளங்கிய) துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்

துரியங் கடந்த நிலையாவது நிருமல துரியாதீதம். அந்நிலை 'கருவிகளோடும் தொழிற்பட்டு நிற்பதாகிய சகல சாக்கிரத்திற்றானே கருவி ஒன்றனோடுங்கூடாது தொழிலிறந்து நிற்கும் நிலை.' (சிவஞான சித்தியார் 8, 34 சிவஞான சுவாமிகளுரை.) அந்நிலை யடைந்தோரது பெருமை.

"சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்க ளுலகிற்
 சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்க ளிவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுவெ னிம்மையிலே யுயிரின்
 பற்றறுத்துப் பரத்தையடை பராவுசிவ ரன்றோ
வாக்குமுடி கவித்தரசாண் டவர்களரி வையரோ
 டநுபவித்தங் கிருந்திடினு மகப்பற்றற் றிருப்பர்."

எனச் சிவஞான சித்தியாரிற் கூறப்பட்டது.

"துரியநிலை கடந்து போந்து, திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்து" என இவ்வாசிரியர் காஞ்சிப் புராணத்தும் அருளிச் செய்தனர். (1)

பொய்யுங் கவடுங் கொடுமையும் வஞ்சமும் பூண்டபொல்லாக்
கையன் கலதி முழுமூட னேனுநின் கண்ணருளா
லுய்யும் படியென்று கூடுமெந் தாயுண்மை யாளரன்பு
செய்யுந் துறைசையுட் டேவேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :—பொய்யும்-பொய்யும், கவடும்-தந்திரமும், கொடுமையும்-கொடுமையும், வஞ்சமும்-வஞ்சனையும், பூண்ட-பொருந்திய, பொல்லாக் கையன் - பொல்லாத கீழ்மகனாகவும், கலதி - மூதேவியாகவும், முழுமூடனேனும்-முழுமூடனாகவும் நான் இருந்தாலும், நின் கண்ணருளால்-தேவரீரது கிருபாகடாக்ஷத்தால், உய்யும்படி - அடியேன் பிழைக்கும் வண்ணம், என்று கூடும் - எந்தக் காலத்தில் கிடைக்கும், எந்தாய் - எனது பிதாவே, உண்மையாளர்-மெய்ம்மையான திருத்தொண்டர்கள், அன்பு செய்யும்-பக்தி

செய்கின்ற, துறைசையுள்--திருவாவடுதுறையில் எழுந்தருளி யிருக்கின்ற. தேவே - கடவுளே, பஞ்சாக்கர தேசிகனே- நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

கலதி என்பது இழிவு குறித்து நின்றது. "மாசு மெய்யி னர் வண்டுவ ராடைகொள், காசைபோர்க்குங் கலதிகள் சொற் கொளேல்" (திருஞான-பண்-கௌசிகம்-திருவாரூர் 10) எனவும், "கலதிவாயமணர்" (பெரிய புராணம்-திரு ஞானசம்-120) எனவும் வருதல் காண்க. எந்தாய் - எப்து தாயே எனவுமாம். (2)

பரிசறி யேனருட் பண்பறி யேனெனைப் பற்றும்வினைக்
கரிசறி யேனது மாற்றறி யேன்கல ரோடிணங்கித்
துரிசுக ளேசெயும் பொல்லா வுலகத் தொழும்பனுக்குன்
தெரிசனங் கிட்டுவ தென்றோபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :— பரிசு அறியேன்-என்னுடைய தன் மையும்யான் அறியேன், அருட் பண்பு அறியேன்-தேவரீரது திருவருளின் தன்மையையும் அறியேன், எனைப்பற்றும்-என் னைப் பொருந்தி யிருக்கின்ற, வினைக்கரிசு அறியேன்-இருவினை களது குற்றத்தையும் தெரியேன், அது மாற்று அறியேன்- அக்குற்றத்தை நீக்கும் முறையையும் தெரியேன், கலரோடு இணங்கி-கீழ்மக்களோடு சேர்ந்து, துரிசுகளே செய்யும்-குற் றங்களையே செய்கின்ற, பொல்லா உலகத்தொழும்பனுக்கு- தீய உலகத்திற்கு அடிமையாகிய எனக்கு, உன்தெரிசனம் கிட்டுவது-தேவரீரது காட்சி கிடைப்பது, என்றோ - எந்தக் காலமோ, பஞ்சாக்கர தேசிகனே-துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

தரிசனம் என்பது மோனையின்பம் நோக்கித் தெரிசனம் என வந்தது. (3)

மருவே னுனதடி யார்திருக் கூட்ட மருவிவஞ்ச
மொருவேன் மகளிர் விழிக்கடை நோக்குக் குளம்பதைத்து
வெருவே னடிமையு மெந்நா ளுனதருண் மேவுவனே
திருவா வடுதுறைத் தேவேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள்:—உனது அடியார்-உன்னுடைய திருத்தொண்டர்களது. திருக்கூட்டம் மருவேன்-திருக்கூட்டத்தைச் சேரேன், மருவி-அத்திருக்கூட்டத்தைச் சேர்ந்து, வஞ்சம் ஒருவேன்-என் மனத்திலுள்ள வஞ்சனையை நீக்கேன், மகளிர் விழிக்கடை நோக்குக்கு-பெண்களது கடைக்கண்ணாற் பார்க்கும் பார்வைக்கு, உளம் பதைத்து-மனம் நடுங்கி, வெருவேன்-அஞ்சேன். அடிமையும்-அடிமையான யானும், எந்நாள்-எந்தக் காலத்தில், உனது அருள் மேவுவனே-தேவரீரது திருவருளை அடைவேனே, திருவாவடுதுறைத் தேவே-திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் கடவுளே, பஞ்சாக்கர தேசிகனே-நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம். (4)

ஆனந்த வாழ்வி லடியாரெல் லாரு மகங்களிப்ப
நானிந்த மாயத் தொடக்கினில் வீழ்ந்து நலிதனன்றே
வானந்த நீண்ட மதிலா வடுதுறை வாழ்முதலே
தேனுந்து பங்கயத் தாளாய்பஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள்:— அடியார் எல்லாரும்-தேவரீரது திருத்தொண்டர்கள் எல்லாம், ஆனந்த வாழ்வில்-பேரானந்தப் பெருவாழ்விலே, அகம் களிப்ப-மனம் மகிழ்ந்திருப்ப, நான்-அடியேன் மட்டும், இந்த மாயத் தொடக்கினில் – இந்த மாயமான பிரபஞ்ச பந்தத்தில், வீழ்ந்து நலிதல் நன்றே-விழுந்து வருந்துதல் நன்றாகுமா, வான் அந்தம் நீண்ட மதில்-மேகமண்டலத்தின் முடிவுரை நீண்ட மதில்கள் சூழ்ந்த, ஆவடுதுறைவாழ் முதலே-திருவாவடுதுறையில் வாழ்கின்ற முதல்வரே, தேன் உந்து பங்கயத் தாளாய்-தேனைச் சொரி

கின்ற தாமரை மலர்போன்ற திருவடியை யுடையவரே, பஞ்சாக்கர தேசிகனே-நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

வானந்த நீண்ட மதில் என்பது உயர்வுநவிற்சியணி. (5)

வற்ருக் கருணைத் திருநோக்கு நின்முக மண்டலமுஞ்
சற்றே முகிழ்த்த குறுமூ ரலுந்தட மார்பழகும்
பொற்ருளுஞ் சின்முத் திரையுநெஞ் சூடு பொறித்துவைப்பாய்
செற்ருர் புரஞ்செற்ற தேவேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள்:— வற்ருக் கருணைத் திருநோக்கும்-குறையாத இரக்கத்தைப் பொழிகின்ற அழகிய திருக்கண்களும், நின்முக மண்டலமும்-தேவரீரது திருமுக மண்டலமும், சற்றே முகிழ்த்த குறுமூரலும்-சிறிதே அரும்பிய புன்சிரிப்பும், தடமார்பு அழகும்-விசாலமான மார்பினது அழகும், பொற்ருளும்-பொன்போன்ற திருவடிகளும், சின் முத்திரையும்-தேவரீர் காட்டியருளுகின்ற சிவஞானபோத முத்திரையும், என் நெஞ்சு ஊடு-அடியேனது நெஞ்சிலே, பொறித்துவைப்பாய்-எழுதிவைத்தருளும். செற்ருர் புரம்செற்ற-பகைவரது முப்புரங்களையும் அழித்த, தேவே-கடவுளே, பஞ்சாக்கர தேசிகனே-துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

"மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயி
ரம்மலர்த் தாணிழ லடங்கு முண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலே யலதுளஞ் சிந்தி யாதரோ."

எனச் சின்முத்திரையின் பொருள் திருவானைக்காப் புராணத்துக் கூறப்பட்டது.

இது திருமேனி தியானஞ் செய்யுமுறை கூறிற்று. (6)

தேருத நெஞ்சுந் தெளியாத சிந்தையுந் தேங்கியின்ப
மூருத கண்ணு மொழியாக் கவலையு முன்புகழே
கூருத நாவு மெனக்கே தகுமென்று கூட்டினையே
சீரு தருள்செயுந் தேவேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :— தேருத நெஞ்சம்-நம்பாத மனமும், தெளியாத சிந்தையும் – நிச்சயிக்காத புத்தியும், இன்பம் தேங்கி ஊருத கண்ணும்-இன்பம் நிறைந்து ஊற்றெடுக்காத கண்களும், ஒழியாக் கவலையும்-நீங்காத கவலையும், உன் புகழே கூருத நாவும்-தேவரீரது கீர்த்தியைமட்டும் சொல்லாத நாக்கும் எனக்கே தகும் என்று கூட்டினையே-மிக்க தீவினை செய்த எனக்கே தக்கனவென்று சேர்த்தருளினீரோ, சீருது அருள்செய்யும் தேவே-சினங்கொள்ளாது அநுக்கிரகம் செய்கின்ற கடவுளே, பஞ்சாக்கர தேசிகனே–துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

தெளிதற் கருவி புத்தி யாகலின், சிந்தை என்பது புத்தியெனப் பொருள் கொள்ளப்பட்டது. புகழே என்பதில் ஏகாரம் பிரிநிலை. 'சீறியருளல்' என்ருர் ஸ்ரீ அருணந்தி சிவமும். (7)

நின்னரு ணோக்கினுக் கெவ்வள வேனு நெகிழ்ந்துருகா
தென்னுடை வன்மன மின்னுர் விழிக்கடைக் கென்னிலந்தோ
வன்னியி னேர்மெழு காயுரு காநிற்கு மாயமென்னே
செந்நெறி யாய்நின்ற தேவேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :— என்னுடைய வன்மனம் - என்னுடைய கொடிய மனமானது, நின் அருள் நோக்கினுக்கு-தேவரீரது கிருபாகடாக்ஷத்திற்கு, எவ்வளவேனும் நெகிழ்ந்து, உருகாது-சிறிதேனும் இளகியுருகுதல் செய்யாது. மின்னுர் விழிக்கடைக்கு என்னில்—பெண்களது கடைக்கண்ணின் பார்வைக்கென்ருல், அந்தோ-ஐயோ, வன்னியின் நேர் மெழு

காய்-தீயினை எதிர்ந்த மெழுகுபோல, உருகாநிற்கும் மாயம் என்னே-உருகி நிற்கின்ற மாயச்செயல் யாது, செந்நெறியாய் நின்ற தேவே-உயிர்கள் இன்பம் அடைதற்குச் செம்மையான வழியாய் நின்ற கடவுளே, பஞ்சாக்கர தேசிகனே-துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

ஆக்கச்சொல் உவமை குறித்து நின்றது: 'ஆள்வாரிலி மாடாவேனோ' என்றாற்போல. (8)

பிறவித் துயரினி யாற்றே னடைக்கலம் பேயுலகின்
மறுகித் திரிந்தலைந் தெய்த்தே னடைக்கல மங்கை நல்லா
ருறவைத் தவிர்த்துய்யக் கொள்வா யடைக்கல முண்மையன்பர்
செறிவுக்குள் வாழுமெய்த் தேவேபஞ் சாக்கரதேசிகனே.

இதன் பொருள் :— பிறவித்துயர் – பிறத்தலால் வருந் துன்பத்தை. இனி ஆற்றேன் – இனிமேலும் பொறுக்ககில்லேன். அடைக்கலம்-அடியேன் தேவரீரது தஞ்சம். பேய் உலகில்-அறிவின்மை பொருந்திய இந்த உலகத்தில், மறுகித் திரிந்து அலைந்து எய்த்தேன்-சுழன்று திரிந்து அலைந்து இளைத்தேன், அடைக்கலம்-அடியேன் தேவரீரது தஞ்சம், மங்கை நல்லார் உறவைத் தவிர்த்து-மங்கைப் பருவத்துப் பெண்களது கூட்டுறவை நீக்கி, உய்யக் கொள்வாய்-அடியேன் பிழைக்கும்படி ஆளாகக் கொண்டருள்வீராக, அடைக்கலம் – அடியேன் தேவரீரது தஞ்சம், உண்மை அன்பர் செறிவுக்குள் வாழும் மெய்த்தேவே-மெய்ம்மையான அடியார்களது கூட்டத்தினுள்ளே வாழுகின்ற சத்தியரூபமான கடவுளே, பஞ்சாக்கர தேசிகனே-துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

நினைத்தலும் செய்தலோ டொக்குமாதலின் 'மங்கை நல்லா ருறவு' எனப்பட்டது. (9)

இருவினை தாமிவை மும்மல மீங்கிவை யீதுசிவங்
கருவுறு மாருயி ருண்மை யிதுவென்று காட்டவல்ல
குருபர னீயன்றி வேறறி யேனிக் குவலயத்திற்
றிருவெண்ணை மெய்கண்ட தேவேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :— இருவினை இவை-இருவினை என்பன இவை என்றும், மும்மலம் இவை—ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களும் இவை என்றும், ஈது சிவம்-சிவம் இது என்றும், கரு உறும் ஆருயிர் உண்மை இது என்று-பிறவியை அடைகின்ற எண்ணிறந்த ஆன்மாக்களின் உண்மைத்தன்மை இது என்றும், காட்டவல்ல-தெரிவிக்கவல்ல, குருபரன் நீயன்றி வேறு அறியேன் இக்குவலயத்தில்-பரமாசாரியர் தேவரீரையன்றி இந்தப் பூமியில் வேறொருவர் உளராக யான் அறிந்திலேன், திருவெண்ணை மெய்கண்ட தேவே-திரு வெண்ணெய் நல்லூரில் அவதரித்தருளிய மெய்கண்ட தேவரே, பஞ்சாக்கர தேசிகனே—துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

தாம், ஈங்கு என்பன அசை. இருவினை என்பது கன்ம மலத்தின் வேறாய் எண்ணப்படுதலை 'இருவினைப் பாசமும் மலக்கலார்த்தலின்' எனவும், 'வினையிரண்டுஞ் சாருமல மூன்றும்' எனவும் வரும் பெரியபுராணத் திருவிருத்தங்களால் அறியப்படும். சிவஞான சித்தியாரில் 'கன்மமு மூலங்காட்டிக் காமிய மலமாய் நிற்கும்' என்பதனுரையில் மூல கன்மம் வேறு எனக் காட்டியருள்வதும் அறியத்தக்கது. தொல்காப்பியர் 'வினையே செய்வது' என்று தொடங்கித் 'தொழின் முதனிலையே' என முடிப்பதும் இக்கருத்துப் பற்றியெனச் சிவஞானபாடியத்திற் கூறப்பட்டது.

அபேதம்பற்றி 'மெய்கண்ட தேவே பஞ்சாக்கர தேசிகனே' என்றார்.

திருவெண்ணெய்நல்லூர் என்பது திருவெண்ணை என மருவிற்று.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் றிருவடி வாழ்க.
ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் மலரடி வாழ்க.

செய்யுள் முதற்குறிப்பகராதி.

அறிவேயருட் ... 1
ஆனந்தவாழ்வி ... 5
இருவினை தாமிவை ... 10
தேருதநெஞ்சும் ... 7
நின்னருணோக்கினுக் ... 8
பரிசறியேனருட் ... 3
பிறவித்துயரினி ... 9
பொய்யுங்கவடுங் ... 2
மருவேனுனதடி ... 4
வற்றுக்கருணை ... 6

ஸ்ரீ வெங்கடேஸ்வர பிரஸ், கும்பகோணம்.